ISSN : 2456-821X அவையம் 3(1) 2019 ப.எண். 51-56

SACRED HEART RESEARCH PUBLICATIONS
புதிய அவையம்
SACRED HEART COLLEGE

புதிய அவையம்

## இருமுனை சிறுகதைத் தொகுப்பில் சொல்லாக்கச் சிந்தனைகள்

***ம. பரிமளாதேவி***
***உதவிப்பேராசிரியர்,***
***தமிழ்த்துறை***
***தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.***

***கட்டுரை பெறப்பட்டது : 14.06.2019*** ***ஏற்கப்பட்டது : 14.06.2019***

### முன்னுரை

*காலந்தோறும் வளர்ந்து கொண்டிருக்கும் மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளக்கும் காரணிகளில் ஒன்று சொல்லாக்கம். புதிய புதிய சொல்லாக்கங்களின் விளைவாக மொழியானது புத்துயிர்ப்பைப் பெற்று வருகிறது. அவ்வாறு இலக்கண இலக்கியங்களில் நிகழ்ந்த சொல்லாங்கள் குறித்துக் சில ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் நவீன இலக்கியங்களில் புதிய சொல்லாக்கங்கள் விளைந்துள்ளனவா என்பதை ஆய்வதை நோக்கமாகக் கொண்டு தூயனின் இருமுனை சிறுகதைத் தொகுப்பில் சொல்லாக்க நெறிமுறையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

### இருமுனை – தூயன்

*தூயன் எழுதிய இருமுனை சிறுகதைத் தொகுப்பு யாவரும் பதிப்பகத்தில் 2016 இல் வெளிவந்த நூல். இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பு இந்நூல். மொத்தமாக ஏழு சிறுகதைகள் மற்றும் ஒரு குறு நாவல் இணைந்து சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்து*

இருக்கிறது. கணையாழி, உயிர் எழுத்து, தீராநதி, வாசக சாலை, இணைய இதழ் என பல்வேறு இதழ்களில் வெளிவந்த கதைகளின் தொகுப்பு இருமுனை நூல். சிறுகதையின் நூற்றாண்டைக் கொண்டாடி இருக்கின்ற சூழலில் புனைகதைகளில் சொல்லாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பது மிக முக்கியமானதொன்றாகும். புனைவுகள் வெறும் பொழுதுபோக்கிற்கானது என்கிற எண்ணத்தை மாற்றி மனிதம், சமூகத்தின் அவலத்தினைப் பேசுவது என்கிற அடுத்த வளர்ச்சியை அடைந்துள்ளது. பரவலாக அனைவரின் கவனத்தை ஈர்த்த இருமுனை சிறுகதைத் தொகுப்பில் சொல்லாக்கம் குறித்து ஆய்வது புனைவு எழுதாளர்கள் மொழி வளர்ச்சிக்கு எத்தகைய பங்கினைச் செலுத்துகின்றனர் என்பதை அறியும் முயற்சியாகும்.

**சொல்லாக்கம் - விளக்கம்**

சொல்லாக்கம் என்ற சொல்லிற்கு அகராதிகள் தரும் விளக்கம், சொற்செய்து கொள்ளுகை" *(formation of words word –building)* என்று சென்னைப் பல்கலைக்கழகப் தமிழ்ப் பேரகராதியும், புதிய சொற்களை உருவாக்குதல் *(coining new eords and terms)* என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் பொருள் கூறுகின்றன.

சொல்லாக்கம் என்பது பொதுப்படச் சொற்களை ஆக்குவதைக் குறிக்கும் சொல்லாகும். கலைச்சொல்லாக்கம் என்பது ஒவ்வொரு துறைக்குரிய சொற்கள் ஆக்கம் பெறுவதைச் சுட்டுவதாகும். அதாவது கல்வித்துறை, இந்து அறநிலையத்துறை, கூட்டுறவுத்துறை, புவியியல் துறை, அறிவியல் துறை, ஆட்சித்துறை,கணினித்துறை போன்று துறைகள் வாரியாகத் தேவைக்கேற்ற சொற்களை ஆக்குதலாகும்.

சொல்லாக்கம் பல்வேறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு ஆராய்ந்து வகைப்படுத்தப் பட்டாலும், சங்க காலத்தில் திரிபு, ஆக்கப்பாடு (மொழியியல், சொல்லியல், பெயரியல், பக். 22-23) ஆகிய இரு பிரிவுகளில் சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது. இதில் திரிபு என்பது இலக்கண அடிப்படையில் உருவாவது. ஆக்கப்பாடு பொருள் மாற்ற அடிப்படையில் நிகழ்வது. சங்க இலக்கியத்தில் கூட்டுச்சொற்கள், பிறமொழிச் சொற்கள், விகுதிவழிச் சொற்கள் என்னும் மூன்று நிலைகளைக் காணமுடிகிறது. இவை மூன்றும் ஆக்கப்பாடு என்ற வகையில் அடங்கும்.

**தொடக்க காலம்**

- தமிழிலேயே கலைச் சொற்களை உருவாக்குதல்
- தமிழில் கலைச்சொற்கள் கிடைக்கவில்லை எனில் அதற்கு நிகரான சமஸ்கிருதச் சொற்களைப் பயன்படுத்துதல்

- *தமிழ் அல்லது சமஸ்கிருதத்தில் சொல்லாக்கம் உருவாக்க இயலாவிடில் ஆங்கிலச் சொல்லை ஒலிபெயர்ப்பில் பயன்படுத்துதல் என்ற நெறிமுறையின் அடிப்படையில் சொல்லாக்கம் விளைந்தது.*

*தமிழ்மொழியின் சொல்லாக்கம் குறித்து ச.இராசேந்திரன், இ. மறைமலை, க.பாலசுப்பிரமணியன், தேவநேயப் பாவாணர் வ.ஜெயதேவன், வே. சீதாலட்சுமி, பொற்கோ முதலிய அறிஞர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அதேபோன்று சொல்லாக்கத்தின் வகைப்பாடுகள் குறித்தும் பல கருத்துக்கள் நிலவுகின்றன.*

*அகராதியியல் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் சிறந்த ஆய்வை நிகழ்த்தி இன்றுவரை அகராதி உருவாக்கத்திலும் அகராதியியல் சார்ந்தும் தன்னுடைய சிந்தனையை வெளிப்படுத்திவரும் வ. ஜெயதேவன் சொல்லாக்கத்தை ,*

1. *கூட்டாக்கம்*
2. *மாற்றாட்டாக்கம்*
3. *கலப்பாக்கம்*
4. *குறைப்பாக்கம்*
5. *ஒப்புமையாக்கம்*
6. *பின்னாக்கம்*
7. *இரட்டிப்பாக்கம்*
8. *கடனாக்கம்*
9. *புத்தாக்கம்*
10. *ஒலிக்குறிப்பாக்கம்*

*என்று பத்துப் பிரிவுகளாகப் பிரித்துள்ளார். இந்த வகை சொல்லாக்க முறையில் இருமுனை சிறுகதைத் தொகுப்பில் உள்ள சொற்களைத் தொகுத்து நோக்கி பின்வரு நிலைகளில் ஆராய்கிறது இக்கட்டுரை.*

***கூட்டாக்கம்***

*இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட அடிச்சொற்களின் கூட்டிணைவால் விளைவது. இதனை அகவட்டக் கூட்டாக்கம் , புறவட்டக் கூட்டாக்கம் எனப் பிரித்துள்ளார்.*

***அகவட்டக் கூட்டாக்கம்:***

*மென்பொருள், குள்ளமனிதன், தோட்டிப்பெண்கள், இரத்தவுறவு, சப்பைமுகம், பஞ்சுத்தாடி , சாமக்காவலன், கிடாப்பன்றி, பவளப்பாறை, குறுஞ்செய்திப்பேழை, குறவன் காலனி , சாக்கடைப் பாலம் , பசிய மாமிசம் , கரிய மோகினி.*

*மென் +பொருள் = மென்பொருள்*
*குள்ளம்+ மனிதன்= குள்ள மனிதன்*

இரத்தம் + உறவு = இரத்த உறவு பெயரடை + பெயர்

சப்பை + முகம் = சப்பை முகம்

பெயரடையும் பெயரும் சேர்ந்து புதிய சொல்லாக்கம் விளைந்துள்ளது.

**புறவட்டக் கூட்டாக்கம்:**

கூம்புமூக்கு, எந்திரப்பூச்சி, ராட்சஸப் பறவை, பாம்புச் சட்டை,எந்திரப் பறவை.

கூம்பு +மூக்கு = கூம்புமூக்கு

எந்திரம் + பூச்சி= எந்திரப்பூச்சி

இராட்சம் + பறவை = இராட்சப் பறவை } பெயரடை + பெயர்

பாம்பு + சட்டை = பாம்புச் சட்டை

பெயரடையும் பெயரும் சேர்ந்து புதிய சொல்லாக்கம் விளைந்துள்ளது.

**கலப்பாக்கம்**

தமிழில் இத்தகைய சொல்லாக்கம் இல்லை. ஆனால் ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதச் சொல்லுடன் தமிழ்ச் சொல்லோ விகுதியோ சேர்ந்து ஆக்கம் பெறும் கடன் கலப்புகள் தமிழில் காணப்படுகின்றன.

ஆஸிட் +தொழிற்சாலை = ஆங்கிலம் + தமிழ்

மௌஸ் + கட்டம்= மௌஸ் கட்டம் = ஆங்கிலம் + தமிழ்

மெகந்தி + கூம்புகள் = மெகந்தி கூம்புகள்= இந்தி + தமிழ்

குடோன் + மூலை = குடோன் மூலை = ஆங்கிலம் + தமிழ்

ஆஸிட் தொழிற்சாலை, மெகந்தி கூம்புகள், மௌஸ் கட்டம், பெயிண்ட் குப்பி, நகபாலிசு, இந்தியா மேப், பிளாஸ்டிக் பெட்டி, நைலான் ஒயர்க் கூடை, ராட்சசப்பறவை, குடோன் மூலை, வட்டி பிசினஸ், சிமெண்டு அறை, ஹெச்சம் அறை இவை போன்று நிறைய சொற்கள் ஆங்கிலம், வடமொழி, இந்தி கலந்து பல புதிய சொற்களை உருவாக்கியுள்ளார்.

**குறைப்பாக்கம்**

ஒரு சொல் அல்லது சொல் தொகுதியைக் குறைத்தலால் விளைவது. இதை மூன்று வகையாகப் பகுத்து விளக்குகிறார்.

**சுருக்கவாக்கம்**

சொற்களைச் சுருக்கி எழுத்தாகக் கொள்வது கி.மு., கி.பி.

சி.இ.ஓ, ஆர்.சி. கிறத்தவப் பள்ளி, உ.பி.

உ.பி. – உத்திரபிரதேசம் .

**கடனாக்கம்**

பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதால் உருவாவது.

ஷேவ், டென்டர், குடோன், பீரோ, பாலிஷ், ஜாஸ்மின் சென்ட், வெயிட்டிங் லிஸ்ட், முனிசிபாலிடி , சலைன்.

பிறமொழியில் உள்ள சொற்களை அப்படியே எடுத்தாள்வது. புதிய சொல்லாக்கத்தை உருவாக்காமல் அல்லது தமிழ் மொழியில் எழுதாமல் இருப்பது என்பது மொழியின் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. மேலும் நிறைய ஆங்கில சொற்களை நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

**புத்தாக்கம்**

புதிதாகச் சொற்களைப் படைத்தலால் உருவாவது. கணினி, மடிக்கணினி, பயணித் தரகர்கள், தொலைவுப் பயணி, புலரி, குறுஞ்செய்திப்பேழை, புலன் தீண்டல், புறநகர் போன்று தமிழில் ஆக்கப்பட்ட சொற்களைத் தம் சிறுகதையில் தூயன் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. கணினித்துறைச் சார்ந்த சொற்களை இங்கு காணமுடிகின்றது. மேலும் பிற துறை சார்ந்த சொற்களும் ஆக்கப்பட்டுள்ளன என்பதை தூயனின் இருமுனை சிறுகைத்தைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள சொற்களைத் தொகுத்து ஆராய்ந்த பொழுது அறியிமுடிகிறது.

**இரட்டிப்பாக்கம்**

சொல் முழுமையாக இரட்டித்தல் மற்றும் பகுதியாக இரட்டித்தல், எதுகை அமைப்பில் இரட்டித்தல் என்பன இவ்வகையில் அடங்கும்.

குண்டு குண்டு, சாவு சாவு, வெட்டிவெட்டி, தொழ தொழ, கலைக்க கலைக்க, மாறி மாறி, மறுபடியும் மறுபடியும், முட்டி முட்டி முதலிய சொற்கள் இரட்டித்துக் காணப்படுகின்றன.

**ஒலிக்குறிப்பாக்கம்**

ஒன்றன் பெயரை அதனோடு தொடர்புடைய ஒலிக்குறிப்பைக் கொண்டு உருவாக்குதல். விம்மலொலி, முனகலொலி, கிலாவ் கிலாவ், தளக் தளக் , புஸ்புஸ், கீச்கீச், விசுக்விசுக், விம்விம், வீய் ,சரசர, பரபர, பரக் பரக் முதலிய சொற்களைக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

மொழியின் வளர்ச்சிக்கு, வரலாற்றினை அறிந்துக்கொள்வதற்கு பெரிதும் துணைபுரிவது சொல்லாக்கம். இருமுனை சிறுகதைத் தொகுப்பில் கூட்டாக்கம் என்கிற வகைப்பாட்டில் ஆக்கப்பாடு அடிப்படையில் சமகாலத்தில் உருவாக்கம் பெற்றுள்ள பல புதிய சொற்களைக் காணமுடிகின்றது. இரட்டிப்பாக்கம் என்பதில் இதுவரை பயன்படுத்தாத சொற்களைக் காணமுடிகின்றது. மேலும் புத்தாக்கம் என்பதிலும் சில சொற்களைக் காணமுடிகின்றது. மாற்றாட்டாக்கம், கலப்பாக்கம் , ஒப்புமையாக்கம், பின்னாக்கம் முதலிய சொல்லாக்கம் முறைகளுக்கு உதாரணங்கள் நூலில் இல்லை. மொழியின் சமகால நகர்வு மற்றும் வளர்ச்சிப் போக்கினை காணுதல் என்பது அவசியமானதால் இந்த ஆய்வு ஒரு முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதன் நீட்சியாக நவீன இலக்கியங்களிலும் இவ்வாய்வினை மேற்கொள்ளலாம்.

**துணைநூற்பட்டியல்**


- *தூயன், இருமுனை, யாவரும் பப்ளிஷர்ஸ், 2016.*
- *இரமேஷ், தி.அ., சங்க இலக்கியம் பாட்டு மரபில் சொல்லாக்கம், பரிதி பதிப்பகம், ஜோலார்பேட்டை, 2017.*
- **கட்டுரை***கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகளில் ஆக்கப்பெயர் விகுதிகள் முனைவர் தி.அ. இரமேஷ்*


புதிய அலையம்